TNVR230022092024

**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்.**

முன்னிலை – திரு.M.சண்முகவேல்ராஜ், B.A., B.L., L.L.M.,

சார்பு நீதிபதி, இராஜபாளையம்.

2025 ம் ஆண்டு ஜுன் திங்கள் 13 ம் நாள் வெள்ளிக்கிழமை

அ.வ.எண்.137/2024

(CNR No:TNVR230022092024)

அ.நாராயணன். ....வாதி

**//எதிர்//**

ரா.அறிவுமணி ...பிரதிவாதி

இந்த வழக்கானது திருவில்லிபுத்தூர் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.519/2023 ஆக கடந்த 26.09.2023 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு வழக்கு விசாரணை நிலுவையில் இருந்து வந்த நிலையில் அதிகார வரம்பிற்கு உட்பட்டு இந்த வழக்கானது இராஜபாளையம் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.137/2024 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு 16.04.2025 ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.துரைசரவணன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.திருமலையப்பன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும், எதிர் வழக்குரைக்காக வழக்கு நிலுவையில் இருந்த

நிலையில் நீதிமன்றத்தில் பிரதிவாதியை அழைத்தும் முன்னிலை ஆகாததால், அவர் தோன்றாத் தரப்பினராக அறிவிக்கப்பட்டு, வாதி தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை நன்கு கவனமுடன் பரிசீலனை செய்து, வாதி தரப்பு வாதத்தை கேட்டு இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**<u>தீர்ப்புரை</u>**

1) **<u>வழக்கின் தன்மை:–</u>**

வாதியிடம் பிரதிவாதி கடந்த 01.06.2021–ம் தேதி வழங்கிய காசோலை அசல் தொகை ரூ.2,50,000/–த்திற்கு மாதம் ரூ.100/–க்கு ரூ.1/–(12%) வீதம் 01.06.2021 முதல் 24.09.2023ம் தேதி வரை வட்டித் தொகை ரூ.69,417/– சேர்த்து ஆகமொத்தம் ரூ.3,19,417/–ஐ பிரதிவாதி வாதிக்கு செலுத்த உத்தரவிடக்கோரியும், தாவா செலவுத் தொகை கேட்டும், இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) வழக்குரையின் சுருக்கம் :–</u>**

இந்திர் வாதிக்கும் இந்நிர் பிரதிவாதிக்கும் இருந்த பழக்கத்தின் பேரிலும் மற்றும் வியாபார அடிப்படையிலும் அவசர நிமித்தம் மற்றும் குடும்ப செலவுக்காகவும் இந்திர் பிரதிவாதி வாதியை அணுகி ரூ.2,50,000/–ரூபாய் இரண்டு லட்சத்தி ஐம்பதாயிரம் கடன் கேட்டதின் பேரில் இந்திர வாதி இந்திர் பிரதிவாதியை முழுமையாக நம்பி ரூ 2,50,000/– பிரதிவாதிக்கு ரொக்க கடனாக

கொடுக்க சம்மதித்துள்ளார் அந்த அடிப்படையில் இந்நிர் பிரதிவாதி இந்நிர் வாதியிடம் கடந்த 02 04. 2021ம் தேதியன்று ரொக்கம் கடனாக ரூ 2,50,000/– கடனாகப் பெற்றுக்கொண்டு மேற்படி கடனை இரண்டு மாத காலத்திற்குள் இந்நிர் வாதியிடம் திரும்ப செலுத்தி தகுந்த ஆதரவு பெற்று விடுவதாகவும் கூறியுள்ளார். இந்நிலையில் இந்நிர் வாதி பிரதிவாதியிடம் ரொக்கம் கடனாக கொடுத்த ரூ 2,50,000/–த்தை இரண்டு மாத கால அடிப்படையில் திருப்பி கேட்டதில் இந்நிர் பிரதிவாதி ரொக்கக்கடனை வாதிக்கு செலுத்தும் விதமாக ஒரு காசோலையை தருவதாகவும் அந்த காசோலையின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட வங்கியில் ரூ.2,50,000/–த்தை இந்நிர் வாதி பெற்றுக்கொள்ளலாம் என்றும் உறுதி கூறியுள்ளார் அதனை உண்மையனெ நம்பிய இந்நிர் வாதி காசோலையை பெற்றுக் கொள்ள சம்மதித்துள்ளார் அதன் அடிப்படையில் இந்நிர் பிரதிவாதி, வாதிக்கு கடந்த 01.06.2021ம் தேதியிட்டு ரூ.2,50,000/–க்கு பிரதிவாதியின் அன்னை திரேட்ஸ் உரிமையாளர் ஸ்தான வங்கி கணக்கான கரூர் வைஸ்யா வங்கி நக்கனேரி கிளை கணக்கு எண் 1798135000000791 க்கான காசோலை எண் 000237 என்ற எண்ணுள்ள காசோலையை இந்நிர் வாதியின் பெயருக்கு வழங்கியுள்ளார். இந்நிலையில் இந்நிர் வாதி மேற்படி காசோலையை கடந்த 16.06.2021ம் தேதியன்று இந்நிர் வாதியின் வங்கிக் கணக்கான புன்னையாபுரம் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி கிளையில் கணக்கு எண் 250100050300119–ல் தாக்கல் செய்ததில் மேற்படி

காசோலையானது இந்நிர் பிரதிவாதியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை (FUNDS INSUFFICIENT) என்ற காரணம் குறிப்பிட்ட திருப்பப்பட்டு இந்நிர் வாதியின் வங்கியால் வாதிக்கு கடந்த 18.06.2021ம் தேதியன்று தகவல் தெரிவிக்கப் பட்டதால் இந்திர் வாதி அதிர்ச்சி அடைந்து இந்நிர் பிரதிவாதியிடம் மேற்படி காசோலை திருப்பப்பட்ட விபரத்தை தெரிவித்ததில் இந்திர் பிரதிவாதி மேற்படி காசோலைக்குரிய தொகையை திரும்ப தராமலும் எவ்வித பதிலும் கூறாமல் இருந்து வந்துள்ளார் இந்நிர் பிரதிவாதியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்பதை நன்கு தெரிந்து கொண்டே இந்நிர் வாதியை ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு இந்நிர் பிரதிவாதி வாதிக்கு மேற்படி காசோலையை அளித்து தாக்கல் செய்து ரொக்கம் பெற்றுக் கொள்ள கூறியுள்ளனர். இந்நிலையில் இந்நிர வாதி மேற்படி காசோலையை தொகையை திரும்ப கேட்டு இந்நிர் பிரதிவாதிக்கு கடந்த 26.06.2021ம் தேதியிட்டு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கு மேற்படி அறிவிப்பை இந்நிர் பிரதிவாதி கடந்த 28.06.2021ம் தேதியன்று பெற்றுக்கொண்டு இந்நிர் பிரதிவாதி வாதியிடம் தான் எதிர்பார்த்த சமயத்தில் பணம் வரவில்லை என்றும் ஆகவே 28.06.2021ம் தேதியில் இருந்து ஏழு மாதத்தில் தாவா கடன் தொகையை ரொக்கமாக நேரில் செலுத்தி காசோலையை மீட்டி விடுவதாக கூறியுள்ளார் இந்நிர் வாதியும், பிரதிவாதி கூறியதை மீண்டும் நம்பியுள்ளார் ஆனால் இந்நிர் பிரதிவாதி கூறிய படி ஏழு மாத காலம் ஆன 28.01.2022ம் தேதிக்குள் தாவா காசோலை கடன்

தொகையை இந்நிர் பிரதிவாதி செலுத்தவில்லை. இந்நிலையில் இந்நிர் வாதி மீண்டும் இந்நிர் பிரதிவாதியிடம் நேரிலும் வகையாட்கள் மூலமாகவும் 01.06.2021ம் தேதிய காசோலை கடன் தொகை ரூ.2,50,000/–ஐ நேரிலும், கேட்டு வந்ததில் இந்திர பிரதிவாதி செலுத்துவதாகவே வின் புகழ் சொல்லி தேவையற்ற நாள் கடத்தி வந்துள்ளார். இந்நிலையில் இந்நிர வாதியை இந்நிர பிரதிவாதி ஏமாற்றி இருக்கும் நிலையில் இந்நிர் வாதி ஏற்கனவே கடந்த 1704.2021 தேதியன்று நடைபெற்ற ஒரு வாகன விபத்தில் கொடூரமான காயங்கள் சந்தித்து தன் உடம்பில் நான்கு எலும்பு முறிவுகளை சந்தித்து. அதற்காக நாகர்கோவில் மருத்துவமனையில் சுஸ்ருஷா உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, மருத்துவ செலவு செய்ய வேண்டிய ரூ 10,00,000/– த்திற்கு பல நபரிடம் கடன் பெற்று மருத்துவ செலவு ரூ 10,00,000/– செலவு செய்து மேற்படி காயங்கள் துயரங்களால் மனவேதனை அடைந்து எந்த வேலைக்கும் செல்ல முடியாமல் தன் வேலையையும் இழந்து வீட்டிலேயே முடங்கியுள்ளார் மேற்படி காயம்பட்ட துயரங்களையும் இந்நிர் பிரதிவாதியிடம் வாதி கூறி காசோலை கடன் தொகை வகையறாக்களை திரும்ப கேட்ட பிறகும். இந்நிர் பிரதிவாதி காசோலை கடன் தொகையை திரும்ப செலுத்தவில்லை இந்நிர் பிரதிவாதியின் செய்கையால் இந்நிர் வாதிக்கு மிகுந்த மனவேதனை மற்றும் மனஉளைச்சல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் இந்நிர் பிரதிவாதி வாதியிடம் வாங்கிய வாங்கிய நாள் முதல் மேற்படி தொகைக்கு வட்டி எதுவும்

செலுத்தவில்லை மேற்படி கடன் தொகையினை விரைவில் செலுத்தி விடுவதாக இந்நிர் பிரதிவாதி வீண் கடத்தி வந்துள்ளார். அதனால் இந்திர் வாதி தனது வழக்கறிஞர் மூலமாக கடந்த 11.02.2022ம் தேதியன்று இந்திர் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றினை அனுப்பியுள்ளார். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பில் 12% வட்டியுடன் செலுத்த கோரி அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி அறிவிப்பினை பெற்றுக் கொண்டார். மேலும் இந்நிர் வாதியிடம் பெற்றுள்ள அசல் மற்றும் வட்டித் தொகையையும் திரும்ப செலுத்தவில்லை இதுசம்மந்தமாக வாதி பலமுறை நேரிலும், சாட்சிகள் மற்றும் தனது வகையாட்கள் மூலமாகவும் கேட்டும் இந்நிர் பிரதிவாதி செலுத்துவதாகவே கூறி வீண் காலம் கடத்தி வந்துள்ளார். இந்நிலையில் இந்நிர் வாதி தனது குடும்ப செலவுக்கும் மற்றும் இதர செலவுகளுக்கும் மேற்படி தொகை தேவைப்படுவதாக இந்நிர் பிரதிவாதியிடம் கேட்டபோது இந்நிர் பிரதிவாதி நாளது தேதிவரை எவ்வித தொகையும் செலுத்தாத காரணத்தினால் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) வாதி வழக்கு தாக்கல் செய்த பிறகு, பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்பு செய்யபட்ட நிலையிலும் பிரதிவாதியை இந்நீதிமன்றம் அழைத்தும் முன்னிலை ஆகாததால், ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டு அவருக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, வழக்கு விசாரணைக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

**4)** கடந்த 16.04.2025 அன்று வாதி மாரிமுத்து அவர்கள் முன்னிலையாகி

நிரூபண வாக்குமூலம் ஒன்றை தாக்கல் செய்து தன்னை வா.சா.1 ஆக விசாரித்துக் கொண்டார். அவர் மூலமாக வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.7 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. இத்தோடு வாதி தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**5)** தற்பொழுது இந்த நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய முக்கியமான பிரச்சனை என்னவென்றால் வாதியின் தாவா அனுமதிக்கப்படக்கூடியதா? அல்லது இல்லையா? என்பதேயாகும்.

**<u>6) பிரச்சனைக்கான தீர்வு:–</u>**

**6.1)** பிரதிவாதிக்கு எதிராக, தாவா கடன் தொகையான ரூ. 3,19,417/–த்தையும் தாவா செலவுத் தொகை கேட்டும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி வழக்கு தாக்கல் செய்த பிறகு, பிரதிவாதியை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டார். வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்காக வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டார். வாதி தரப்பு சான்றாவணங்களாக, வா.சா.ஆ.1 ஆக வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல். வா.சா.ஆ.2 ஆக 01.06.2021 தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதி கொடுத்த கரூர் வைஸ்யா வங்கி நக்கனேரி கிளை காசோலை எண்.000237 அசல். வா.சா.ஆ.3 ஆக 18.06.2021 தேதியிட்ட வாதியின் வங்கியில் வழங்கப்பட்ட ரிட்டன் மெமோ அசல். வா.சா.ஆ.4 ஆக 26.06.2021ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக

நகல். வா.சா.ஆ.5 ஆக 28.06.2021ம் தேதியிட்ட அஞ்சலக ஒப்புதல் அட்டை நகல். வா.சா.ஆ.6 ஆக 12.02.2022ம் தேதியிட்ட பிரதிவாதிக்கு மீண்டும் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல். வா.சா.ஆ.7 ஆக 19.9.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் Track consignment online copy ஆகியவைகள் குறியீடு செய்யப்பட்டது.

**6.2)** வாதி தரப்பு சாட்சியத்தையும், வா.சா.ஆ. 1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களை பரிசீலித்ததில், பிரதிவாதி வாதியிடமிருந்து ரூ. 3,19,417/—ஐ கடனாக பெற்றுக்கொண்டு, அதற்கு ஆதரவாக கடந்த 01.06.2021ம் தேதி அன்னை திரரேட்ஸ் உரிமையாளர் ஸ்தான வங்கி கணக்கான கரூர் வைஸ்யா வங்கி, நக்கனேரி கிளை கணக்கு எண்.1798135000000791க்கான காசோலை எண்.000237 என்ற எண்ணுள்ள காசோலையை வாதிக்கு வழங்கியுள்ளார். மேற்படி சங்கதிகள் உண்மையானவை என்று வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பிரதிவாதியை பொறுத்த வரையில் வாதியின் வழக்கை மறுதளித்து தங்கள் வழக்கை முன்னெடுத்து செல்லவில்லை. பிரதிவாதி தோன்றாத் தரப்பினராக உள்ள நிலையில், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் வாதி தரப்பு வழக்கு நிரூபிக்கப் பட்டிருப்பதால் பிரதிவாதி தாவா கடன் தொகையைச் செலுத்தக் கடமைப்பட்டவர் என்பதாலும் வாதி கோரியுள்ள பரிகாரமானது வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று தீர்மானிக்கப்படுகிறது.

7) இறுதியாக,

1) வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

2) பிரதிவாதி வாதிக்கு ரூ.3,19,417/—ஐ செலுத்த வேண்டும் என்றும், மேற்படி கடன் தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தீர்ப்பாணை காலம் வரைக்கும் 9% ஆண்டு வட்டியுடனும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரைக்கும் 6% ஆண்டு வட்டியுடனும் செலுத்த வேண்டும்.

3) வழக்கு செலவுத் தொகையை பிரதிவாதி, வாதிக்கு வழங்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 13.06.2025—ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

SHUNMUGAVEL RAJ Digitally signed by SHUNMUGAVEL RAJ

**சார்பு நீதிபதி,**
**இராஜபாளையம்**

**<u>வாதி தரப்பு சாட்சிகள்:—</u>**

| | |
|---|---|
| வா.சா.1 | திரு. நாராயணன் (வாதி) |

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:—</u>**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல். |
| வா.சா.ஆ.2 | 01.06.2021ம் தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதி கொடுத்த கஷூர் |

| | |
|---|---|
| | வைஸ்யா வங்கி நக்கனேரி கிளை காசோலை எண்.000237 அசல் |
| வா.சா.ஆ.3 | 18.06.2021 ம் தேதியிட்ட வாதியின் வங்கியில் வழங்கப்பட்ட ரிட்டன் மெமோ அசல். |
| வா.சா.ஆ.4 | 26.06.2021 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல். |
| வா.சா.ஆ.5 | 28.06.2021 ம் தேதியிட்ட அஞ்சலக ஒப்புதல் அட்டை நகல். |
| வா.சா.ஆ.6 | 12.02.2022 ம் தேயிட்ட பிரதிவாதிக்கு மீண்டும் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல். |
| வா.சா.ஆ.7 | 19.09.2023 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் Track consignment online copy |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> – இல்லை.

SHUNMUGAVEL RAJ

Digitally signed by SHUNMUGAVEL RAJ

**சார்பு நீதிபதி,**
**இராஜபாளையம்**